

Smt. Dr. Ranganayaki Sachidanandam, D/o (Late) Kanadukathan M. Rajaraman hails from a traditional musical family. Her father, her uncle kanadukathan M. Ramamoorthi and her grand father kanadukathan Malaiyappa Iyer were all eminent Mridanga Vidwans. Her husband D. Sachidanandam, Violinist, retired from AIR Madurai in the year 2018.

She is basically a B.Com graduate. But her musical inclination took her to M.A., M.Phil, Ph.D in music. Her thesis in Ph.D was “Ragam Thanam, Pallavi” She completed in 2020. She has been performing vocal concerts all over India and abroad for the last 30 years. At present, she is learning the laya nuances under the tutelage of Dr.Madurai k. Thiagarajan. She has to her credit about 30 students learning music. She is a B High Graded artist of All India Radio.

# பல்லவியில் அவதானம்

# பல்லவியில் அவதானம்

## கட்டுரைச்சுருக்கம்

பல்லவியில் அவதானம் என்ற கட்டுரை தலைப்பிற்குள் போவதற்கு முன்பாக பல்லவி, அவதானம் இரண்டிற்கும் உரிய விளக்கத்தை தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. பதம் + லயம் + வின்யாஸம் = பல்லவி. அவதானம் என்றால் ஒரே சமயத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட விஷயங்களை ஞாபகம் வைத்துக் கொள்வது ஒரே சமயத்தில் பல வேலைகளைப் பம்பரமாகச் சுழன்று செய்வது என்பதை மட்டும் குறிப்பது அல்ல. அவதானம் என்ற சொல்லிற்கு கூர்ந்து கவனித்தல், அஜாக்கிரதையாக இல்லாதிருத்தல், அபார ஞாபக சக்தி என்று விளக்கம் கொடுக்கப்படுகிறது. இலக்கியத்துறையில் அவதானம் என்பது மிகப் பழங்காலத்திலிருந்தே வழக்கத்தில் இருந்து வருகிறது.இலக்கிய சம்பந்தமாக பல விஷயங்களைக் கற்றறிந்து நல்ல அனுபவம் பெற்றவர்கள் இலக்கியத்துறையில் அவதானம் செய்வதை நாம் கண்கூடாகக் கண்டிருக்கிறோம். ஆனால் இசையில் அவதானம் என்பது இசையுள்ளேயே புதைந்து கிடக்கிறது. சுருங்கச் சொன்னால் இசையில் அவதானம் நமது கண்ணிற்குப் புலப்படுவதில்லை. அவதானம் செய்வதில் மனித மூளையின் பங்கு மிக அதிகம்.மற்ற துறையில் அவதானம் செய்பவர்கள் நிறைய படித்துத் தெரிந்து கொண்டு அவற்றை நினைவில் தக்க வைத்துக் கொண்டு அவதானம் செய்வதற்குப் பயன்படுத்தி வந்தனர்.ஆனால் பழங்கால இசைக்கலைஞர்களில் பலர் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள்.அப்படிப்பட்டவர்கள் ஏராளமான உருப்படி வகைகளை செவி வழி கேட்டு அவற்றை மனனம் செய்து பாடிவந்தார்கள். இது கல்பித ஸங்கீதம் எனப்படும். கல்பனா ஸங்கீதம் என்ற மற்றொரு வகையில் முழுக்க முழுக்க கற்பனா சக்தி தான் ப்ரயோகிக்கப்படுகிறது.ராக ஆலாபனை பாடுதல், கல்பனாஸ்வரம் பாடுதல், தானம் பாடுதல், பல்லவி பாடுதல் போன்றவை. அதிலும் பல்லவி பாடுதல் மனோ தர்ம ஸங்கீதத்தின் உச்ச நிலை என்று கூறப்படுகிறது. அடிப்படை கல்வி கூட பெறமுடியாத அக்காலத்து வித்வான்கள் தான் இத்தகைய பல்லவிகளை ஏராளமாக வடிவமைத்து இன்றைய இசை தலைமுறையினருக்கு முன்னோடியாக விளங்கி வருகிறார்கள் என்றால் அவர்களின் அறிவுகூர்மை, கவனசக்தி, ஞாபகசக்தி எந்த அளவிற்கு சிறப்பானதாக இருந்திருக்கும் என்று நம்மால் கணிக்கமுடிகிறது. காஞ்சிபுரம் நயினாபிள்ளை, அம்மாசத்திரம் கண்ணுசாமி பிள்ளை, புதுக்கோட்டை மான்பூண்டியாபிள்ளை, புதுக்கோட்டை தட்சிணாமூர்த்திபிள்ளை, திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளை, வலையபட்டி A.R. சுப்ரமணியம். போன்றவர்களை இதற்கு

உதாரணமாகச் சொல்லலாம்.அதிலும் இந்த அவதானம் என்ற அம்சம் பல்லவி பாடுவதில்தான் அதிக அளவில் பொதிந்துள்ளது என்ற ஒரு திடமான எண்ணம் என் மனதில் தோன்றுகிறது.பல்லவியில் எந்த அளவிற்கு அவதானம் செய்யப்படுகிறது என்பதை அனைவரும் அதிலும் இளம் மற்றும் வளர்ந்து வரும் இசைக்கலைஞர்கள் உணர வேண்டும்.மேலும் அவதானம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் பல்லவியில் அவதானம் செய்யப்படுவதில்லை. அவதானம் செய்தால்தான் பல்லவியே பாட முடியும்.இதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் தான் "**பல்லவியில் அவதானம்**" என்ற தலைப்பை எடுத்துக் கொண்டுள்ளேன். இந்தக் கட்டுரையில் அவதானம், பல்லவியின் பொருள் விளக்கம், பல்லவியில் எவ்வாறு அவதானம் ப்ரயோகிக்கப்படுகிறது, அவதானத்திற்கும், மனித மூளைக்கும் உள்ள தொடர்பு போன்றவற்றை விளக்கியுள்ளேன்.

# பல்லவியில் அவதானம்

## முன்னுரை:

அவதானம் என்பதற்கு கூர்ந்து கவனித்தல், மிக்க கவனமாக, ஜாக்கிரைதையாக இருத்தல், ஒன்றிற்கு மேற்பட்ட விஷயங்களை ஞாபகம் வைத்துக் கொள்ளுதல் என்று விளக்கம் கூறப்படுகிறது.

நமது நாட்டில் மிகப் பழங்காலந்தொட்டே அவதானம் செய்யும் முறை இருந்து வருகிறது. இந்த அவதானம் என்ற ஒரு கலையை வெளிப்படுத்துவதற்கு கூர்ந்து கவனிக்கும் தன்மை, அபார ஞாபகசக்தி போன்றவை மிக அதிக அளவில் தேவைப்படுகிறது.இது எல்லோருக்கும் எளிதில் கை கூடும் ஒரு விஷயமல்ல. பழங்காலத்தில் இந்த அவதானமானது இலக்கிய துறையில் தான் அதிக அளவில் கையாளப்பட்டு வந்தது. உதாரணமாக செய்யுள்களை மனனம் செய்து தங்கு தடையின்றி ஒப்பித்தல், எந்த தலைப்பிலிருந்து விஷயங்களை கேட்டாலும் எந்த தயக்கமுமின்றி விடையளித்தல் அடிப்படை எழுத்துகளில் (ALPHABETS) குறிப்பிட்ட எழுத்துகளை பயன்படுத்தாமல் ஒரு கவிதையையோ அல்லது பாடலையோ உடனுக்குடன் இயற்றுவது போன்றவை..

ஆனால் காலப்போக்கில் அந்த அதீத ஞாபகசக்தி, புத்திகூர்மை இவற்றைப் பயன்படுத்தி ஒருவர் மற்றவர்களை மகிழச் செய்யும் ஒரு கேளிக்கையாக (Entertainment) மாறியது இந்த அவதானம். இந்த முறையில் ஒரு தனிமனிதர் அவதானம் செய்வார். இவருக்கு அவதானி என்று பெயர். இந்த அவதானியிடம் கேள்விகள் கேட்கப்படும். ஒருவர் பிரதானமாக நின்று அவதானியிடம் பலவிதமான கேள்விகள் கேட்பார். இதற்கிடையில் இன்னும் சிலர் அவதானியின் கவனத்தை சிதறவைக்கும் பணியில் ஈடுபடுவர். இது வேண்டுமென்றே மேற்கொள்ளப்படும் ஒரு பணியாகும். உதாரணமாக ஒருவர் இடையிடையே மணியடிப்பார், மற்றொருவர் எழுந்து வெளியில் போவதும் உள்ளே வருவதுமாக இருப்பார். அவதானி ஏதேனும் ஒரு கவிதையை அல்லது செய்யுளை ஒப்பித்துக் கொண்டிருக்கலாம். அல்லது ஏதேனும் ஒரு தலைப்பில் உரையாற்றிக் கொண்டிருக்கலாம். அவரை அந்த வேலையை ஒரே சமயத்தில் முழுமையாகச் செய்யவிடாமல் மேற்கூறப்பட்ட கவனத்தைச் சிதறடிக்கும் பணிகள் செய்யப்படும். அவதானி தான் கூறிக் கொண்டிருக்கும் செய்யுள் அல்லது கவிதை அல்லது ஆற்றிக்கொண்டிருக்கும்

உரைக்கு நடுவில் எத்தனை முறை மணியடிக்கப்பட்டது தனக்கு எதிரே அமர்ந்திருக்கும் ஒருவர் எழுந்திருந்து எத்தனை முறை உள்ளேயும் வெளியேயும் சென்று வந்தார் போன்றவற்றை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு கூறவேண்டும். இந்த அவதானம் இலக்கியத்தில் மட்டுமல்லாது கணிதம், இசை போன்றவற்றிலும் பின்பற்றப்படுகிறது.

## அவதானத்தின் வகைகள்:

ஷடாவதானம் - 6 விஷயங்களை நினைவில் வைத்து கொள்ளுதல்

அஷ்டாவதானம் - 8 விஷயங்களை நினைவில் வைத்து கொள்ளுதல்

ஷோடாஸாவதானம் - 16 விஷயங்களை நினைவில் வைத்து கொள்ளுதல்

ஸஹஸ்ராவதானம் - 1000 விஷயங்களை நினைவில் வைத்து கொள்ளுதல்

இசையிலும் அவதானம் கையாளப்படுகிறது. அதாவது இசையிலும் அவதானம் செய்ய முடியும் என்று ஒரு கூற்று நிலவி வருகிறது. இன்னும் சொல்லப் போனால் இசையே ஒரு அவதானம் தான். அதிலும் கர்நாடக இசையில் எண்ணிலடங்கா லய வேலைப்பாடுகள், மனோதர்ம விஷயங்கள் அடங்கியுள்ளன. கர்நாடக இசையின் மனோதர்ம பிரிவில் உச்ச நிலையாக கருதப்படும் பல்லவி பாடும் முறையில் இந்த லய வேலைப்பாடுகளுக்கு குறைவே இல்லை என்று கூறலாம். பொதுவாகவே இசைஅவதானத்திற்கு இடமளிக்கிறது என்றால் பல்லவி என்ற அம்சம் அவதானத்திற்கான வாய்ப்பை எந்த அளவிற்கு ஏற்படுத்திக் கொடுக்கிறது என்று நம்மால் ஊகிக்க முடிகிறது.அது மட்டுமல்லாமல் இசை உலகினர் பல்லவிக்கும் அவதானத்திற்கும் உள்ள தொடர்பை கட்டாயம் அறிந்து கொள்ள வேண்டும். அது பல்லவி,அவதானம் இரண்டின் சிறப்பையும் நமக்கு எடுத்துணர்த்தும், இந்த தொடர்பை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் தான் “பல்லவியில் அவதானம்” என்ற இந்த தலைப்பை எடுத்துக்கொண்டு விளக்க முற்பட்டுள்ளேன்.

இசை “உபவேதம்” என்றழைக்கப்படுகிறது. வேதத்தை தொகுத்து வியாசர் எழுதி வைப்பதற்கு முற்பட்ட காலத்தில் வேதங்கள் மனனம் செய்யப்பட்டுதான் சொல்லப்பட்டு வந்தன. வியாசர் வேதத்தை எழுதி வைத்தாலும் இப்போதும் வேதங்களோ, உபநிஷத்துக்களோ அல்லது எந்த விதமான மந்திரங்களோ மனனம் செய்யப்பட்டு தான் சொல்லப்படுகின்றன. இதற்கு அத்யயனம் செய்தல் என்று பெயர். அதே போல் தான் இசையும் செவிவழி கேட்கப்பட்டுதான் ஒரு

தலைமுறையினரிடமிருந்து அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு செலுத்தப்பட்டது. இன்று கல்லூரி பாடத்திட்டத்திற்குள் எழுத்துருவில் இசையைக்கொண்டு வந்தாலும் க்ருதி கீர்த்தனைகளுக்கான ஸ்வரதாள குறிப்புகள் அடங்கிய புத்தகங்கள் ஏன், லய வாத்யத்திற்கான பாடங்களைக் கொண்ட புத்தகங்கள் வெளிவந்தாலும் நன்கு மனனம் செய்யப்பட்டு பல நாட்கள் பயிற்சி செய்யப்பட்ட இசை தான் அதிக அளவில் பரிமளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. இசையை அவதானம் செய்ய இந்த மனனம் செய்யும் முறை தான் பிரதானம். எப்போது மனனம் என்ற ஒரு முறை ஈடுபடுத்தப்பட்டதோ அப்போது அவதானம் என்பதும் சாத்தியம் தான்.

## **அவதானம் செய்வதில் இசைதுறைக்கும் மற்ற துறைக்கும் ஒரு ஒப்பீடு**.

அவதானம் செய்வதில் இசைதுறைக்கும் மற்ற துறைகளுக்கும் சில ஒற்றுமைகளும் உண்டு வேற்றுமைகளும் உண்டு.

செய்யுள்களையோ ஸ்லோகங்களையோ மனனம் செய்து அவற்றை ஒப்பித்தலில் இரு வகையுள்ளது. அதாவது ஏற்கனவே உள்ளவற்றை மனனம் செய்து ஒப்பிப்பது அல்லது கேள்வி கேட்பவர்கள் ஏதாவது ஒரு தலைப்பினைக் கொடுத்து உடனே அதே சமயத்தில் கவிதைகளையோ, பாடல்களையோ புணைந்து அவற்றைக் கூறுவது என்று இரண்டு வகையாகக் கூறலாம். அதே போல் தான் இசையிலும் கல்பித சங்கீதம், கல்பனா சங்கீதம் என்ற இரண்டு வகைகள் உண்டு. ஏற்கனவே இயற்றப்பட்டுள்ள க்ருதிகளைக் கற்றுக்கொண்டு பாடுதல் என்பது கல்பித ஸங்கீதம் எனவும், ராக ஆலாபனை, ஸ்வரம் பாடுதல், தானம், பல்லவி பாடுதல் போன்ற கற்பனை சக்தியைக் கொண்டது. கல்பனா ஸங்கீதம் அல்லது மனோதர்ம ஸங்கீதம் எனப்படுகிறது.மேற்கூறப்பட்டுள்ள விஷயங்கள் தான் இந்த இரு துறைக்கும் உள்ள ஒற்றுமைகள், வேற்றுமை என்று பார்க்கும் போது ஒரு ஆச்சர்யமான அடிப்படைக் கூற்று ஒன்று இருக்கிறது.அது என்னவென்றால் மற்ற துறைகளில் அவதானியை அவதானம் செய்யவைப்பதற்கு தேவையான கவனச் சிதறல் பணிகள் வெளியிலிருந்து பெரும்பாலும் வருகின்றன. ஆனால் இந்த கவனச் சிதறல்கள் ஏற்படுத்தும் அம்சங்கள் வெளியிலிருந்து வருவதை விட இசைக்குள்ளேயே அதிகம் இருக்கின்றன. இது இசையின் எதிர்மறைக் கூறல்ல இதுதான் இசையின் சிறப்பம்சமும் பலமும்!

இசையில் அவதானம் என்று பார்க்கும் போது அது ஒருவர் இசைநிகழ்ச்சி நிகழ்த்திக் கொண்டிருக்கும் போது அவரை அவதானம் செய்விக்க அவரிடம் கவனச் சிதறல்களை ஏற்படுத்துவது என்பது மேலோட்டமான பார்வை. இது எல்லாத் துறையிலும் நிகழ்த்தப்படும் அவதானம் போல்தான். இது ரசிகர்களை கவரும் கேளிக்கை, பொழுதுபோக்கு, அம்சம் தான். ஆனால் இசையோடு ஒன்றியிருக்கும் சில கவனச்சிதறல்கள் கலைஞருக்கு மிகப் பெரிய சவாலாக அமைகிறது. பொதுவாக இசை நிகழ்ச்சி நிகழ்த்துவதென்பது அவ்வளவு சாதாரண செயல் அல்ல. அது அனைவருக்கும் கைகூடும் ஒரு செயலும் கிடையாது. இசையிலேயே அவதானம் செய்வதற்கு இவ்வளவு வாய்ப்புகள் இருக்கும் போது பின்பு எதற்குப் "பல்லவியில் அவதானம்" என்ற தலைப்பை எடுத்துக் கொண்டு விளக்க முற்பட வேண்டும் என்ற கேள்வி மனதில் எழக்கூடும். ஏற்கனவே கூறப்பட்டுள்ளது போல் இசையானது கல்பித ஸங்கீதம் கல்பனா ஸங்கீதம் என்ற இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. இதில் பொதுவகவே இசை நிகழ்ச்சிகள் நிகழ்த்தும் போது நிகழ்ச்சி நடத்தப்படும் இடத்தின் அமைப்பு, ஒலிபெருக்கி வசதிகள், ரசிகர்களின் எதிர்பார்ப்புகள், பாடுபவரின்/ வாசிப்பவரின் குரல்வளம்/ விரல் வளம் , பக்க வாத்தியகாரர்களின் ஒத்துழைப்பு ,நிகழ்ச்சி நடக்குமிடத்தில் சுற்றுப்புறசூழல் அமைப்பு,நிகழ்ச்சி அமைப்பாளர்களின் குணநலன்கள் போன்றவற்றில் கூர்ந்து கவனம் செலுத்த வேண்டும். இதைத் தவிர ஸ்ருதி, தாளம், பாடப் போகும் பாடல்களின் வரிகள், இராக ஆலாபனை, ஸ்வரம் பாடுதல் போன்று இசையுடன் ஒன்றியிருக்கும் விஷயங்கள், இப்படியாக புற விஷயங்கள், அகவிஷயங்கள் இரண்டைடையும் கூர்ந்து கவனித்தால் தான் ஒரு இசைநிகழ்ச்சியானது செவ்வனே அமையும். அதிலும் பல்லவி பாடுதல்/வாசித்தல் என்பது கல்பனா ஸங்கீதத்தின் மிக உயர்ந்த நிலையாகக் கருதப்படுவதால் அதற்கு என்றும் கூர்மையான கவனம் தேவை.இசையில் அவதானம் என்பது பல்லவி பாடுவதில் தான் அதிக அளவில் நிகழ்த்தப்படுகிறது என்று அடித்துக்கூறலாம்.

**பல்லவி:** பத லய வின்யாஸமே பல்லவி என்று பல்லவிக்கு விளக்கம் கொடுக்கின்றன இசை கிரந்தங்களும் நூல்களும். பதம் என்றால் சொற்கள் அல்லது பாட எடுத்துக்கொள்ளப்பட்ட வரிகள். லயம் என்பது தாள ஒருங்கிணைப்பு, வின்யாஸம் என்றால் கற்பனையாகப் பாடுதல், விரித்துப் பாடுதல் என்று பொருள்படும். இதில் பதத்தை விரித்து, கற்பனையாகப் பாடுதல் என்பது நிரவல் பாடுவதைக் குறிக்கிறது. லய வின்யாஸம் என்றால் தாளத்தில் பல விதமான லய கற்பனைகளைப் புகுத்திப் பாடுவது. இதில் மேலும் ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால் பல்லவி பாடுவதற்கென்று ஒரு சம்பிரதாயம் இருக்கிறது. அதைக் கட்டாயம் பின்பற்றி தான் பல்லவி பாட வேண்டும்.

## பல்லவி பாடும் முறை :

1. பல்லவியின் அடிப்படை அமைப்பு பாடுவது.
2. நிரவல் பாடுவது
3. த்ரிகாலம் திஸ்ரம் பாடுவது
4. கல்பனா ஸ்வரம் பாடுதல்.

    i) ஸர்வலகு ஸ்வரம்

    ii) லய வேலைப்பாடுகள் கொண்ட ஸ்வரம்.

    iii) ராக மாலிகையாக ஸ்வரம் பாடுதல்

    (iv) குறைப்பு பாடுதல்

    a. சாதாரண குறைப்பு
    b. ஜாதிக் குறைப்பு
    c. ராகமாலிகை கல்பனா ஸ்வரம் பாடினால் அதை விலோமமாகப் பாடிக் கொண்டு வந்து பல்லவி அமைக்கப்பட்ட ராகத்தில் கோர்வைபாடுவது

இதற்கெல்லம் மேற்பட்ட ஒரு விஷயம் பாடுபவர் தாம் பாடும் போது மட்டும் லயக்கட்டுப்பாட்டுடன் இருந்தால் போதாது. பக்கவாத்யகாரர்கள் வாசிக்கும் போதும் சரி, தனியாவர்த்தனத்தின் போதும் சரி காலப்ரமாண சுத்தமாகத் தாளம் போட வேண்டும். மேலே கூறப்பட்டுள்ள விஷயங்களை நோக்கும் போது பல்லவி பாடுவதற்கு எத்தனை கவனமும் ஈடுபாடும் தேவை என்பதை இசை கற்றவர்களால் மிகத் துல்லியமாக புரிந்து கொள்ள முடியும். மேலும் கூர்ந்து கவனித்தல், பல விஷயங்களை ஞாபகம் வைத்து கொள்ளுதல், அஜாக்கிரதையாக இல்லாமல் இருத்தல் போன்ற அவதானத்தின் அத்தனை அம்சங்களும் பல்லவி பாடுவதில் இருப்பதைக் காணலாம். இனி பல்லவியில் அவதானம் செய்வது எப்படி என்று பார்க்கலாம்.

பல்லவியில் அவதானம் என்பது பல்லவியை அமைப்பதிலிருந்து தொடங்கிவிடுகிறது என்று கூறலாம். ஆரம்ப காலத்தில் பல்லவிக்கென்று தனியாக சாஹித்யம் அமைக்கப்படாமல் ஏதாவது ஒரு க்ருதி அல்லது கீர்த்தனையின் பல்லவி பகுதி பல்லவி பாடுவதற்கு அடிப்படை வரிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆனால் அதற்கு பிறகு வந்த காலங்களில் பல்லவி பாடுவதற்கென்றே தனியாக

சாஹித்யங்கள் அமைக்கப்பட்டன. இப்போது நடைமுறையில் பல விதமான கருத்துக்களை மையபொருளாகக் கொண்டு விதவிதமான பல்லவிகள் இயற்றப்படுகின்றன. (உ-ம்) பெருந்தொற்றான covid மீது கூட பல்லவிகள் இயற்றப்பட்டு பாடபடுகின்றன. ஆனால் பல்லவிக்கு சாஹித்யம் அமைப்பதென்பது அவ்வளவு எளிதான காரியமன்று. அது பல்லவி அமைப்பு விதிமுறைகளுக்கு உட்பட்டே இருக்கவேண்டும். பல்லவியை அமைக்கப்படுவதற்கு எடுத்துக் கொள்ளப்படும் சாஹித்யம் முழுமையான அர்த்த பாவம் பொருந்தியதாக இருக்க வேண்டும்.

பல்லவியின் முன்பகுதி சாஹித்யமான பூர்வாங்கத்திற்கும் பின்பகுதி சாஹித்யமான உத்ராங்கத்திற்கும் இடையே உள்ள பகுதியான அரிதிக்கார்வை என்று கூறப்படும் .பதகர்ப்பபத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும். இந்த பதகர்ப்பபத்தை எடுத்துக்கொள்ளப்படும் தாள அட்சரங்களுக்கு ஏற்ப அமைக்க வேண்டும்.

மேற்கூறப்பட்டவைகளில் எந்த அளவிற்கு அவதானம் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதை உணரலாம். பல்லவியில் அமைக்கும் விதத்திலேயே இத்தனை கூர்ந்த கவனம் (அவதானம்) தேவையென்றால் பல்லவி பாடுவதில் எந்த அளவிற்கு அவதானம் செயல்படுத்தப்பட வேண்டுமென்பதை நம்மால் ஊகிக்க முடிகிறதல்லவா?

## பல்லவி பாடும் முறையில்அவதானம்:

### i). பல்லவியின்அடிப்படைஅமைப்பை பாடுதல்:

பல்லவியின் "ஆஸ்" என்று கூறப்படும் அடிப்படை அமைப்பை பக்கவாத்யகாரர்களுக்கும் ஏன், ரசிகர்களுக்கும் புரியும் வகையில் தெள்ளத் தெளிவாகப் குறைந்தபட்சம் 4 முறையாவது பாட வேண்டும். இதில் காலப்ரமாணத்தை கூர்ந்து கவனிக்கவேண்டும். அவதானத்தின் பொருளான அஜாக்கிரதையாக இல்லாமலிருத்தல் என்ற அம்சம் இங்கு கையாளப்படுகிறது. காலப்ரமாணத்தில் சிறிது அள்வு கவனக்குறைவு அல்லது அஜாக்கிரதை ஏற்படுமானால் அது பல்லவி பாடும் அழகையும் முழுவதுமாக கெடுத்து விட வாய்ப்பிருக்கிறது .ஏனென்றால் காலப்ரமாணபிசகு அதற்குப் பின்னால் பாட உள்ள த்ரிகாலம் திஸ்ரம், கல்பனா ஸ்வரம் பாடுதல் ஆகிய அனைத்திலும் குழப்பம் உண்டாக்கக்கூடும்.

ii) **நிரவல் பாடுதல்**:

நிரவல் பாடுதல் என்பது மனோதர்ம சங்கீதத்தின் ஞானமான ஒரு அம்சமாகும் நிரவல் என்பதற்கு "நிரப்புதல்" என்று பொருள் கூறப்படுகிறது. எடுத்துக்கொண்ட சாஹித்யத்தின் அடிப்படைஅமைப்பு மாறாமல் அதே சமயத்தில் ராகத்தின் பாவம் கெடாமல் கற்பனையாகப் பாடுவதே நிரவல் எனப்படும். அடிப்படை அமைப்பில் சாஹித்யத்தின் ஒவ்வொரு எழுத்தும் தாளத்தில் எந்த இடத்தில் வருகிறதோ நிரவல் பாடும் போதும் அதே இடத்தில் தான் வர வேண்டும். மேலும் நிரவலுக்கு எடுத்துக்கொள்ளப்படும் சாஹித்யம் முழு அர்த்த பாவம் பொதிந்த முழுமையான வரியாக இருக்க வேண்டும். மேலும் நிரவல் பாடுதல் என்பது க்ருதியை பொறுத்த வரையிலுமே ஒரு கடினமான அம்சமாகும். பல்லவியில் நிரவல் சரியான முறையில் பாடவில்லையென்றால் பதகர்ப்பம் எனப்படும் அரிதிக்கார்வை அதற்குரிய இடத்தில் வந்து சேராது.

III)**த்ரிகாலம் திஸ்ரம் பாடுதல்**:

த்ரிகாலம் பாடுவதற்கு "அனுலோமம்" செய்தல் என்ற ஒரு பெயரும் உண்டு. கையில் போட்டுக் கொண்டிருக்கும் தாளத்தின் வேகம் அப்படியே இருக்க பாடும் வேகத்தை அதிகரிப்பதே அனுலோமம் என்பது. இதற்குரிய பயிற்சிகள் ஆரம்ப பாடங்களிலேயே மேற்கொள்ளப்படுகிறது. ஆரம்ப பயிற்சி பாடங்களான ஸ்வராவளி, ஜண்டைவரிசைகளே முதல், இரண்டாம், மூன்றாம் காலத்தில் பாடப்படுகின்றன. பல்லவியிலும் இதே முறை பின்பற்றபடுகிறது. பல்லவியின் அடிப்படை அமைப்பு மத்யம காலத்தில் (இரண்டாம்) அமைக்கப்படுவது மரபு. த்ரிகாலம் பாடும் முறையில் முதலில் பல்லவி அதன் அடிப்படை அமைப்பு காலத்திலிருந்து கீழ் காலத்தில் (முதல் காலம்) ஒரு முறை பாடப்படுகிறது. பிறகு பல்லவி அமைக்கப்பட்டுள்ள மத்யம காலத்தில் (2 ம் காலம்) 2 முறை பாடப்படுகிறது. பின் பல்லவி அமைக்கப்பட்டுள்ள காலத்திற்கு மேல் காலம் அதாவது துரித காலம் பாடப்படுகிறது.

**திஸ்ரம் பாடுதல்**:

கீழ் காலம், மத்யமகாலம், பாடி முடித்தவுடன் திஸ்ரம் பாடப்படுகிறது. அதாவது சதுஸ்ரகதியில் அமைக்கப்பட்டுள்ள பல்லவியை நடைமாற்றி திஸ்ர நடையில் பாடும் முறை. சதுஸ்ரம் என்பது ஒரு அட்சரத்திற்கு 4 மாத்திரைகள் வீதம் பாடுதல் என்றால் திஸ்ரம் ஒரு அட்சரத்திற்குள் 6 மாத்திரைகள் பாடுவதாகும். இதில் திஸ்ர கால அளவுகள் பாடுபவருக்கு துல்லியமாக, நிர்ணயமாக இருக்க

வேண்டும். இதில் கொஞ்சம் அஜாக்கிரதை ஏற்பட்டாலும் தாளம் போகும் அபாயம் உள்ளது. இந்த திஸ்ரம் பாடும் போது முழு பல்லவியையும் மூன்று முறை முழுவதும் பாடினால் தான் இடத்திற்கு வரும்.

**கல்பனா ஸ்வரம் பாடுதல்**:

எடுத்துக் கொள்ளப்பட்ட பல்லவி எந்த ராகத்தில் அமைந்துள்ளதோ அதற்கு கற்பனையாக கீழ்க்கால, மேல்கால ஸ்வரங்கள் பாடுதல் இதிலும் 2 பிரிவு உள்ளது.

**ஸர்வலகு ஸ்வரம்**

அதிக லய வேலைபாடுகள் இல்லாத கல்பனா ஸ்வரங்கள் பாடுதல். ஸர்வலகு என்றால் நாம் நினைப்பது போல் "எளிதான" தன்று. எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள ராகத்தில் நல்ல ஞானமும், கவனமும் பயிற்சியும் இருந்தால் தான் ராகபாவம் கெடாமல் சரளமாக ஸ்வரம் பாட முடியும்.

**லய வேலைபாடுகளுடன் கூடிய கல்பனா ஸ்வரங்கள் பாடுதல்**:

இது இன்னும் அதிக கவனத்துடன் செய்யப்படக்கூடியது. பல்லவி என்றாலே அது லய விஷயங்களுக்கு ஒரு சவால் தான். இதில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள தாளம் மிக முக்கியப்பங்கு வகிக்கிறது. ஏற்கனவே கஷ்டமான தாளம் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்றால் அதில் அதிக லய வேலைபாடுகள் கொண்ட கல்பனா ஸ்வரங்கள் பாடுவதற்கு எவ்வளவு கூர்ந்த கவனம் தேவையென்று சொல்லத்தேவையில்லை.

**ராகமாலிகை கல்பனா ஸ்வரம் பாடுதல்**:

பல்லவி அமைந்த ராகத்தை அனுசரித்து வேறு ராகங்களை எடுத்துக்கொண்டு கல்பனா ஸ்வரம் பாடுதல்: இதிலும் இரண்டு வகை உண்டு. வேறு ஒரு ராகத்தை எடுத்துக்கொண்டு ஸ்வரம் பாடி விட்டு பல்லவியின் ராகத்தில் பல்லவி வரிகளைப் பாடுதல் ஒரு வகை. எந்த ராகத்தில் கல்பனா ஸ்வரம் பாடப்படுகிறதோ அதே ராகத்தில் பல்லவியின் வரிகளை அமைத்து பாடி எடுத்தல் என்பது மற்றொரு வகை. இதில் ராகமாலிகை ஸ்வரங்கள் பாட தேர்ந்தெடுக்கப்படும் ராகத்திற்கும், பல்லவியின் ராகத்திற்கும் எந்த தொடர்பும் இருக்க கூடாது. அப்படியிருந்தால் இரண்டிற்கும் வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாது. தேர்ந்தெடுக்கப்பட்ட ராகத்தில் நல்ல சரளமாக பாடும் திறமை இருக்க வேண்டும். ராகமாலிகை ஸ்வரங்கள் பாடும் போது மிகுந்த கவனம் வேண்டும். யோசித்துப் பார்த்தால் இதுவும் அவதானம் தானே?

**குறைப்பு பாடுதல்:**

கல்பனா ஸ்வரங்கள் பாடிக் கொண்டே வந்து ஒரு முடிப்பு கொடுப்பது. இது ஆவர்த்தனக்கணக்கு அடிப்படையில் குறைந்து கொண்டே வரும். அதாவது 8 ஆவர்த்தனத்தில் தொடங்கி 4,2,1 என்று குறைந்து கொண்டே வரும். இதிலும் சமத்திற்கு குறைப்பது பல்லவியின் எடுப்பு இடத்திற்குக் குறைப்பது என்ற இரண்டு வகையுண்டு. இதை அனுசரித்து குறைப்பு எடுக்கும் இடம் மாறுபடும். குறைப்பிலும் சாதாரண குறைப்பு, ஜாதிக் குறைப்பு என்ற இரு பிரிவு உள்ளது.

**சாதாரண குறைப்பு:** சாதாரண குறைப்பு என்பது கல்பனா ஸ்வரம் பாடிக்கொண்டு வந்து ஒரு சிறிய முடிப்பு கொடுப்பது.

**ஜாதிக்குறைப்பு அல்லது விசேஷக் குறைப்பு:** இது இன்னும் கடினமானது. பல்லவி அமைக்கப்பட்டுள்ள தாளத்தின் அட்சர அளவிற்கேற்ப தான் இந்த குறைப்பு அமைக்கப்பட வேண்டும். அதாவது இன்ன அட்சரங்கள் கொண்ட தாளத்திற்கு 5 ஜாதிகளுக்குள் குறிப்பிட்ட ஜாதிகுறைப்பு தான் பாட வேண்டும் என்ற நியதி உள்ளது. உதாரணமாக சதுஸ்ரஜாதிதிரிபுடை தாளத்தில் பல்லவி பாடினால் அதற்கு மிஸ்ரஜாதி குறைப்பு தான் பாட வேண்டும் என்பது நியதி. ராகமாலிகை கல்பனாஸ்வரம் பாடினால் குறைப்பும் ராகமாலிகையாகப் பாடி பல்லவி அமைக்கப்பட்டுள்ள ராகத்திற்கு வந்து கோர்வை பாடி முடிப்பது வழக்கம்.

மேலே கூறப்பட்டுள்ள விவரங்கள் பல்லவி பாடுவதில் கட்டாயம் கடைபிடிக்க வேண்டியவை. இதைப் படிங்குங்கால் பல்லவியில் அவதானம் எந்த அளவிற்கு உள்ளது என்பதை அறிய முடியும். இதில் மேலும் ஆச்சர்யபடத்தக்க விஷயம் ஒன்றுள்ளது. அது என்னவென்றால் **"அவதானப் பல்லவிகள்"** என்றே அழைக்கப்படும் பல்லவிகள் சில உள்ளன. இவை "அபூர்வ பல்லவிகள்" என்றும் அழைக்கப்படுகின்றன. அவற்றுள் சில

<u>(i)**சிம்ஹநந்தனதாள பல்லவி:**</u>

சிம்ஹநந்தனதாளம் 108 தாளங்களுள் ஒன்று. 128 அட்சரங்கள் கொண்டது. தாளங்களில் பொதுவாகக் காணப்படும் லகு, த்ருதத்தைத் தவிர குரு, புலுதம், காகபாதம் போன்ற அங்கங்கள் உடையது. தாளங்களிலேயே மிகப் பெரியதாளம் இது தான். தாளத்தை மட்டும் தவறில்லாமல் ஒரு ஆவர்த்தனம் போடுவதே ஒரு அவதானம்.இதில் பல்லவியும் பாடுவதென்றால்?!

<u>(ii)**லஷ்மீஸம் தாளம்:**</u>

இதுவும் 108 தாளங்களில் ஒன்று.25 அட்சரங்களைக் கொண்டது. இதிலும் புலுதம் என்ற அங்கம் இடம்பெறுகிறது.

**<u>(iii)பஞ்சகதிப் பல்லவி:</u>**

இதில் ஒரு தாளத்தின் ஒரே ஆவர்த்தனத்திற்குள் சதுஸ்ரம், திஸ்ரம், கண்டம், மிஸ்ரம், ஸங்கீர்ணம் ஆகிய 5 சுதிகளிலும் பல்லவி அமைத்துப்பாடுவது.

**<u>(iv)3களைப் பல்லவி:</u>**

சாதாரணமாக பல்லவிகள் இரண்டு களை, நான்கு களைகளில் அமைக்கப்படும். அபூர்வமாக சில பல்லவிகள் மூன்று களைகளில் அமைக்கப்படும்.

**<u>(v)க்ரஹபேத பல்லவி:</u>**

ஒரு ராகத்தில் உள்ள ஸ்வரஸ்தானங்களில் ஷட்ஜத்தை தவிர மற்ற ஸ்வரஸ்தானங்களை ஷட்ஜமாக வைத்துக் கொண்டு பாடுதல். அவ்வாறு பாடும் போது வேறு வேறு ராகங்கள் கிடைக்கும். அதுமாதிரி க்ரஹபேதம் செய்து பல்லவியைப்பாடுதல், அதாவது முதலில் எடுத்துக்கொள்ளப்பட்ட ராகத்தில் பல்லவியின் அடிப்படை அமைப்பை பாடுதல் பின் அந்த ராகத்தில் இடம்பெறும் ஒவ்வொரு ஸ்வரஸ்தானத்தையும் ஷட்ஜமாக வைத்துக் கொண்டு கிடைக்கும் ராகங்களில் பல்லவி பாடுதல். இதில் பல்லவியின் அடிப்படை அமைப்புமட்டுமின்றி த்ரிகாலம், திஸ்ரம், குறைப்பு, கோர்வை ஆகிய அனைத்து அம்சங்களையுமே பாடுவதற்கு இடம் உள்ளது.

**<u>இரட்டைகைத்ரிபுடைபல்லவி</u>**: வலது கையில் ஒருதாளம், இடது கையில் ஒரு தாளம் போட்டுக்கொண்டு பாடுதல்.

**<u>இரட்டைப்பல்லவி</u>**: இரண்டு தாளங்களை இணைத்துப்பாடும்.

<u>பல்லவி:</u> இரண்டு தாளத்திற்கும் தனித்தனியாக அரிதி கார்வை எனப்படும் பத கர்ப்பம் இருக்கும். இரண்டு தாளங்களின் பல்லவிகளின் சாஹித்யங்களின் கருப்பொருளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்கும். பல்லவி பாடுவதென்பதே ஒரு அவதானம் அதிலும் அவதானப்பல்லவிகள் என்றே அழைக்கப்படும் பல்லவிகள் பாடுவதென்பது இசைக்கலைஞர்களுக்கு மிகப்பெரிய சாவாலாக உள்ளது.

**<u>அவதானத்திற்கும் மனிதமூளை செயல்பாட்டிற்கும் உள்ள தொடர்பு:</u>**

அவதானத்திற்கும் மூளையின் செயல்திறனுக்கும் நிச்சயமாக தொடர்பு உண்டு. மனிதனின் மூளையானது இடதுமூளை, வலது மூளை என்ற பிரிவினைக் கொண்டுள்ளது. இதில் இடது மூளைதிட்டமிட்டு செயல்படும் வகையிலும் வலது மூளை கற்பனைகள், உணர்வுகள் சார்ந்து செயல்படும் வகையிலும் இருக்கும். இன்னும் தெளிவாக கூறவேண்டும் எனில், வலது மூளை கலை சார்ந்த வேலைகளிலும், இடது மூளை தொழில் சார்ந்த வேலைகளிலும் ஆதிக்கம் செலுத்தும். ஹிப்போ கேம்பஸ் என்ற மூளையின் பின்புறப்பகுதி குறுகிய கால நினைவுகளையும், கோர்டெக்ஸ் என்ற மூளையின் புறணிப்பகுதி நீண்டகால நினைவுகளின் இல்லமாகிறது. மேலும் இடது மூளை திட்டமிட்டு செயல்படும். வலது மூளை திட்டமிடாது. ஆனால் வேலையில் இறங்கிவிட்டால் சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பித்துவிடும். இதில் அவதானத்தை தொடர்புபடுத்திப் பார்க்கும் போது இடது மூளையை சார்ந்திருக்கும் அவதானிகள் செய்யுள் ஒப்புவித்தல், கணித அவதானம் போன்றவற்றில் திறமை வாய்ந்தவர்களாகவும், வலது மூளையை சார்ந்திருக்கும் அவதானிகள் கொடுக்கும் தலைப்புகளில் பாடல்களையோ, கவிதைகளையோ உடனுக்குடன் இயற்றி அரங்கேற்றுவார்கள் அல்லது கொடுக்கப்படும் தலைப்புகளில் நீண்டநேரம் உரையாற்றும் திறனைப்பெற்றிருப்பார்கள். ஆனால் இசைகலைஞர்கள் அதிலும் பல்லவி பாடுவதில் ஆற்றலும் ஆர்வமும் உள்ள இசைகலைஞர்கள் வலது இடது இரண்டு மூளைகளையுமே சார்ந்து இருப்பவர்களாக இருப்பார்கள். அப்படி இருந்தால் தான் அவர்களால் பல்லவி பாடுவதில் சிறந்து விளங்கமுடியும்.

## <u>முடிவுரை</u>

அவதானம் என்பது மேலோட்டமாக பார்க்கப்படும் போது ஒரு கேளிக்கை அம்சமாகத் தோன்றினாலும், அதை தம் வசமாக்க அவதானிகள் கடுமையான பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மனப்பாட பயிற்சிகள், தியான பயிற்சிகள் போன்றவை இதற்கு உதவும் ஊன்று கோல்களாக இருக்கின்றன. மற்ற துறைகளில் அவதானம் செய்வது கடினம் என்றால் பல்லவியில் அவதானம் என்பது மகாகடினம். இதற்கு தியான பயிற்சி மட்டும் போதாது. தவம் மேற்கொள்வது போல் அந்த பல்லவி பாடுவதில் இருக்கவேண்டும், இசையே ஒரு தவம் செய்வது போலதான். அதிலும்பல்லவி, பாடுதல் கடும் தவம் செய்வது போல். இந்த பல்லவி பாடும் சம்பிரதாயமானது சுமார் 150 வருடங்களுக்கு முன்தோன்றியது. லயவித்வான்கள் அதிலும் தவில்வித்வான்கள் தான் பல்லவி அமைப்பதில் மிக கைதேர்ந்தவர்களாகவும் மற்ற வத்வான்களுக்கு முன்னோடிகளாகவும் இருந்துள்ளார்கள். இதில் மேலும் ஆச்சர்யபடத்தக்க விஷயம் என்ன வென்றால் அந்தக் கால வித்வான்களில் பலர் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள்,

சொல்லப்போனால் பள்ளிகூடம் பக்கம் தலைவைத்து படுக்காதவர்கள், ஆனால் அவர்கள் பல்லவி என்ற ஒரு உயரிய மனோதர்ம ஸ்ங்கீத முறையை இன்றைய தலைமுறையினருக்கு ஒரு புதையல் போல் கொடுத்திருக்கிறார்கள் என்றால் அவர்களின் கடுமையான உழைப்பிற்கு ஈடு இணையாக எதையும் சொல்ல இயலாது. உடலை வருத்தி மூளையை கசக்கிப்பிழிந்து லய வேலைப்பாடுகள் நிறைந்த பலபல்லவிகளை, சிம்ஹநந்தனதாளம் உள்பட வடிவமைத்திருக்கிறார்கள்.

இன்றைய காலத்திலும் பல பல புதுமையான பல்லவிகள் இசைக்கலைஞர்களால் வடிவமைக்கப்படுகின்றன. எனவே பல்லவியை ஒரு அவதானம் என்றும் பல்லவி பாடும் கலைஞரை ஸஹஸ்ராவதானி என்றும் கூறுவது மிகையாகாது.

**துணை நின்றவை:**


1. https://www.google.com/url?sa=t&source=web&rct=j&url=https://en.m.wikipedia.org/wiki/Avadhanam&ved=2ahUKEwj71OGoyPHyAhWe4XMBHdLGAiYQFnoECEEQAQ&usg=AOvVaw3reDUaie8rSPj1nlESWIu8&cshid=1631179390996
2. https://www.google.com/url?sa=t&source=web&rct=j&url=https://tamil.boldsky.com/insync/pulse/2015/interesting-facts-left-brain-vs-right-brain-008653.html&ved=2ahUKEwjpnbGIyfHyAhWO73MBHVQoCVMQFnoECAkQAQ&usg=AOvVaw0LtukAXwRVENwMkqAX4jkg